முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

அமர்வு வழக்கு எண் : 05/2023

அரசுதரப்பு 1 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **ஜெகதீசன்** | வயது | : | 51 |
| தந்தை/கணவர் பெயர் | : | சுப்ரமணியன் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலுக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 05.03.2026 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது ஆவினன் குடி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடநத் 03.10.2020 ந் தேதி ஆலடி காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்த போது 03.10.2020–ந் தேதி இரவு 19.30 மணிக்கு ஆலடி காவல் நிலைய உதவி ஆய்வாளர் S.சுபிக் ஷா அவர்களுக்கு உதவியாக நானும் என்னுடன் பணிபுரியும் காவலர்2429 C. சிலம்பரசன் ஆகியோர் சகிதம் மணல் கடத்தல் தடுப்பு வழக்கு சம்மந்தமாக புலன் வைத்து கண்காணித்து சென்று கொண்டு இருந்த போது, நடியப்பட்டு குளக்கரை அருகில் புலன்வைத்து கண்காணித்து கொண்டு போகும் போது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த TN 56 J 7212 என்ற எண்ணுள்ள டிப்பர் லாரியை நிறுத்திய போது அதன் ஓட்டுநர் மேற்படி டிப்பர் லாரியை நிறுத்துவிட்டு ஓடி தலைமறைவாகிவிட்டார்.

மேற்படி டிப்பர் லாரியை சோதனை செய்ததில் அதில் சுமார் 2 யூனிட் அளவிற்கு கூழாங்கற்கள் இருந்தது. மேற்படி டிப்பர் லாரியின் ஓட்டுநரை பற்றி விசாரிக்க பரமசிவம், த/பெ. சிவசங்கரன், செட்டி தெரு, விருத்தசாலம் தாலுக்கா என தெரியவந்தது. மேற்படி டிப்பர் லாரியில் எதிரி கூழாங்கற்களை ஏற்றி வருவதற்கு அரசு அனுமதியோ. உரிமமோ வைத்திருக்கவில்லை. மேற்படி எதிரி நிலத்தடி நீரூக்கு பாதிப்பு ஏற்படுத்தும்படியும் சுயலாபம் கருதியும், திருட்டுதனமாகவும் கூழாங்கற்களை ஏற்றிக்கொண்டு வந்தது தெரிந்து அந்த நேரத்தில் அந்த இடத்தில் அந்நிய சாட்சிகள் யாரும் இல்லாததால் இரவு 19.45 மணிக்கு போலீஸ் சாட்சிகள் முன்னிலையில் கைபற்றுதல் மகஜரில் தடயங்களை உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். மேற்படி கைபற்றுதல் மகஜரில் நானும் காவலர்2429 C. சிலம்பரசன் என்பவரும் சாட்சிகளாக கையொப்பமிட்டோம். பின்னர் பார்ட்டி மற்றும் தடயங்கள் சகிதம் இரவு 20.30 மணிக்கு நிலையம் கொண்டு வந்து எதிரியின் மீது ஆலடி காவல், 836/2020 U/S 379, 430, IPC r/w 21(1) MM ACT – 4 செய்ய உதவியாக இருந்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். கைப்பற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ.1** ஆகும். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வண்டி தான் கைப்பற்றப்பட்டது. புகைப்படம் **சா.பொ.1** ஆகும். எதிரி இடைக்காலப்பொருப்பில் பெற்று சென்ற வண்டி அதற்போது என்னிடம் வீடியோவில் காண்பிக்கப்பட்ட வண்டி தான் அது **சா.பொ.2** வழக்கு சொத்து எண் 127/2020 விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

காவல் நிலையத்திலிருந்து எத்தனை மணிக்கு சென்றேன் என்று நேரத்தினை குறிப்பிட்டு வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியின் பெயர் யாரிடம் கேட்டு தெரிந்த கொள்ளப்பட்டது என்று எனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மகசரில் கூழாங்கற்கள் ஏற்ற பயன்படுத்திய உபகரணங்கள் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். நான் கண்ணுற்ற சாட்சி என்ற அடிப்படையில் தனி அறிக்கை எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். கைப்பற்றியதாக சொல்லும் இடம் மக்கள் நடமாட்டம் உள்ள குளக்கரை பகுதி என்றால் சரிதான். பக்கத்தில் நிறைய கிராமங்கள் உள்ளதால் அந்த வழி தான் பொதுவாக பயன்படுத்தும் வழி என்றால் சரியல்ல. அன்னியசாட்சிகள் யாரும் முன்வரவில்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். கூழாங்கற்கள் எங்கிருந்து எடுத்துவரப்பட்டது என்று விசாரித்து அந்த இடத்திற்கு நான் செல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் சொன்ன தேதியில். சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் எந்த வாகனமும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் வாகனத்திற்கும் சம்பந்தம் இல்லை என்பதும், புள்ளி விவரக் கணக்கிற்காக மேல் அதிகாரியால் போடப்பட்ட வழக்கு என்பதால் அதற்கு அனுசரணையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

அமர்வு வழக்கு எண் : 05/2023

அரசுதரப்பு 2 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **சிலம்பரசன்** | வயது | : | 37 |
| தந்தை/கணவர் பெயர் | : | சின்னதம்பி | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 05.03.2026 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது ஆலடி காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். நான் ஆலடி காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்த போது 03.10.2020–ந் தேதி இரவு 19.30 மணிக்கு ஆலடி காவல் நிலைய உதவி ஆய்வாளர் S.சுபிக்ஷா அவர்களுக்கு உதவியாக நானும் என்னுடன் பணிபுரியும் தலைமை காவலர் 952 S. ஜெகதீசன் ஆகியோர் சகிதம் மணல் கடத்தல் தடுப்பு வழக்கு சம்மந்தமாக புலன் வைத்து கண்காணித்து சென்று கொண்டு இருந்த போது, நடியப்பட்டு குளக்கரை அருகில் புலன்வைத்து கண்காணித்து கொண்டு போகும் போது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த TN.56.J.7212 என்ற எண்ணுள்ள டிப்பர் லாரியை நிறுத்திய போது அதன் ஓட்டுநர் மேற்படி டிப்பர் லாரியை நிறுத்துவிட்டு ஓடி தலைமறைவாகிவிட்டார். மேற்படி டிப்பர் லாரியை சோதனை செய்ததில் அதில் சுமார் 2 யூனிட் அளவிற்கு

கூழாங்கற்கள் இருந்தது. மேற்படி டிப்பர் லாரியின் ஓட்டுநரை பற்றி விசாரிக்க பரமசிவம் S/O சிவசங்கரன், செட்டி தெரு, விருத்தசாலம் T.K என தெரியவந்தது. மேற்படி டிப்பர் எதிரி கூழாங்கற்களை ஏற்றி வருவதற்கு அரசு அனுமதியோ. ஏற்படுத்தும்படியும், சுயலாபம் கருதியும். திருட்டுதனமாகவும் கூழாங்கற்களை ஏற்றிக்கொண்டு வந்துள்ளார். அந்த நேரத்தில் அந்த இடத்தில் அந்நிய சாட்சிகள் யாரும் இல்லாததால் இரவு 19.45 மணிக்கு போலீஸ் சாட்சிகள் முன்னிலையில் கைபற்றுதல் மகஜரில் உதவி ஆய்வாள்ா தடயங்களை கைபற்றினார் மேற்படி கைபற்றுதல் மகஜரில் நானும் தலைமை காவலர் 952 S. ஜெகதீசன் என்பவரும் சாட்சிகளாக கையொப்பமிட்டோம். பின்னர் பார்ட்டி மற்றும் தடயங்கள் சகிதம் இரவு 20.30 மணிக்கு நிலையம் கொண்டு வந்து எதிரியின் மீது ஆலடி காவல் , 836/2020 U/S 379. 4.20. IPC r/w 21(1) MM ACT – 4 செய்ய உதவியாக இருந்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 ஆவது கையெழுத்து என்னுடையது தான். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வண்டி தான் கைப்பற்றப்பட்டது. எதிரி இடைக்காலப்பொருப்பில் பெற்று சென்ற வண்டி அதற்போது என்னிடம் வீடியோவில் காண்பிக்கப்பட்ட வண்டி தான் வழக்கு சொத்து எண் 127/2020 விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

காவல் நிலையத்திலிருந்து எத்தனை மணிக்கு சென்றேன் என்று நேரத்தினை குறிப்பிட்டு வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

எதிரியின் பெயர் யாரிடம் கேட்டு தெரிந்த கொள்ளப்பட்டது என்று எனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மகசரில் கூழாங்கற்கள் ஏற்ற பயன்படுத்திய உபகரணங்கள் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். நான் கண்ணுற்ற சாட்சி என்ற அடிப்படையில் தனி அறிக்கை எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். கைப்பற்றியதாக சொல்லும் இடம் மக்கள் நடமாட்டம் உள்ள குளக்கரை பகுதி என்றால் சரிதான். பக்கத்தில் நிறைய கிராமங்கள் உள்ளதால் அந்த வழி தான் பொதுவாக பயன்படுத்தும் வழி என்றால் சரியல்ல. அன்னியசாட்சிகள் யாரும் முன்வரவில்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். கூழாங்கற்கள் எங்கிருந்து எடுத்துவரப்பட்டது என்று விசாரித்து அந்த இடத்திற்கு நான் செல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் சொன்ன தேதியில். சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் எந்த வாகனமும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் வாகனத்திற்கும் சம்பந்தம் இல்லை என்பதும், புள்ளி விவரக் கணக்கிற்காக மேல் அதிகாரியால் போடப்பட்ட வழக்கு என்பதால் அதற்கு அனுசரணையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.